1972 டிசம்பர் 15]

திரு. கே. எ. வகாப் : சென்னையில் உள்ள காற்று கெடுவதற்கு முக்கிய காரணம் லாரிகளில் டீஸல் எண்ணெய்க்குப் பதிலாக மண்ணெண்ணெய் போட்டு ஓட்டுகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. அந்த லாரிகள் குறைந்த பட்சம் நகரத்திற்குள் அதிகமாக நடமாடாமல் இருக்கச் செய்வதற்கு வழிவகைகள் வகுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அப்படி புகை கக்கும் மோட்டார் வாகனங்கள் 4,584 மீது கடந்த 1972 ஆகஸ்ட் மாதம் வரையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. சிலர் வார்னிங் செய்யப்பட்டிருக்கிறார்கள். வேறு சிலருக்கு ஐந்து ரூபாயிலிருந்து ஐம்பது ரூபாய் வரை அபராதம் போடப்பட்டிருக்கிறது. ரூ. 12,542 அபராதத்தின் மூலம் போலீஸ் இலாகாவினால் வசூலிக்கப்பட்டிருக்கிறது. இந்த நடவடிக்கைகள் மூலம் அவர்கள் திருந்துவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஓட்டல் தொழிலாளருக்கு ஊதியக்குழு

* 191 வினா.—திரு. அ. தேவேந்திரன்
திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஓட்டல் தொழிலாளருக்கான ஊதியக்குழு ஏதேனும் நிறுவப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : குழு அமைப்பது அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. கா. வேழவேந்தன் : தமிழ்நாடு முழுவதிலும் ஆயிரக்கணக்கான ஹோட்டல் தொழிலாளர்களுக்கு சரியான ஊதிய வசதி இல்லை. பல ஹோட்டல் முதலாளிகள் அவர்களுக்குரிய ஊதியத்தை வழங்காமல் அவர்களை ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்றதொரு புகார் ஹோட்டல் தொழிலாளர்கள் மாநாட்டில் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. அமைச்சர் அவர்களிடம்கூட ஹோட்டல் தொழிலாளர்கள் சங்கத்தின் சார்பில் ஒரு மனு கொடுக்கப்பட்டிருக்கிறது. எனவே விரைவாக அக்குழு அமைக்கப்பட்டு குறிப்பிட்ட சில மாதங்களுக்குள் முடிவு தெரிவிப்பதற்குரிய வழிவகை செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : உறுப்பினர் அவர்களின் எண்ணப்படி அக்குழு விரைவில் அமைக்கப்படும்.

திரு. அ. தேவேந்திரன் : எல்லாப் பிரச்னைகளையும் விரைவாக தீர்த்திடும் நமது அரசு நீண்ட நெடுங்காலமாக தீர்க்கப்படாமல் இருக்கிற இந்த ஹோட்டல் தொழிலாளர்கள் பிரச்னையை விரைவாகத் தீர்க்குமா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : ஹோட்டல் தொழிலாளர்கள் குறைந்தபட்ச ஊதியம் பற்றி அதற்கான அட்டவணையைக் கொடுப்பதில் காலதாமதம் இருந்தது. அது இப்போது கொடுக்கப்பட்டிருக்கிறது. எனவே பிரச்னை விரைவில் தீர்க்கப்படும்.

திரு. மு. சுருளிவேல் : நம்முடைய மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் டெல்லியில் நடைபெற்ற முதல் அமைச்சர்கள் மாநாட்டில் our first step is to demolish monopoly houses என்று கூறினார்கள். அதேபோல் தென் பாண்டி மண்டலத்தில்......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா, ஹோட்டல் தொழிலாளர்களைப் பற்றியது. நேரடியாகக் கேள்வி கேளுங்கள். அதற்கு முன்னுரை வேண்டாம். ஹோட்டலுக்கு வாருங்கள் நேராக.

திரு. மு. சுருளிவேல் : பஸ்களைத் தேசியமயமாக்கும் முற்போக்குக் கொள்கையினை கடைப்பிடித்தார்கள் நம் அரசினர். இன்று இந்த நாட்டிலுள்ள முதலாளி வர்க்கத்தில் அங்கம் வகிக்கக்கூடிய ஓட்டல் அதிபர்கள் அவ்வளவு பலஹீனமான நிலையில் இல்லை. எவ்வளவோ கன்சீலியேஷன் தீர்ப்புகளை அவர்கள் தூக்கி எறிந்திருக்கிறார்கள். எவ்வளவோ தீர்ப்புக்களை அவர்கள் அலட்சியப்படுத்தியிருக்கிறார்கள். எனவே, இப்படி ஒரு குழு அமைக்கும்போது அதன் தீர்ப்புக்களை அமல்படுத்த உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : உறுப்பினர் அவர்களின் வேண்டுகோள் நினைவில் வைத்துக்கொள்ளப்பட்டு தக்க சமயத்தில் ஆவன செய்யப்படும்.

மத்திய அரசுத் தேர்வுகளுக்கான பயிற்சி நிலையம்

* 192 வினா.—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., போன்ற மத்திய அரசுப் பணிகளுக்கு பயிற்சி அளிக்கும் நிலையத்திற்கு தேவையான தாழ்த்தப்பட்ட, மலைவாசி மாணவர்கள் முன் வருவதில்லை என்பது உண்மையா ?